Diploma, Anna University-UG, PG., HSC & SSLC
Notes Available @
Syllabus www.AllAbtEngg.com
Question Papers
Results and Many more…

T

# முதல் இடைப்பருவத் தேர்வு - ஜூலை 2019
## பன்னிரெண்டாம் வகுப்பு
## தமிழ்

**நேரம் : 1.15 மணி** **மதிப்பெண்கள்:45**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்தெழுதுக.** **8 x 1 = 8**

1. இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல்
   (அ) யாப்பருங்கலக்காரிகை (ஆ) தண்டியலங்காரம்
   (இ) தொல்காப்பியம் (ஈ) நன்னூல்
2. பொருத்துக:
   (அ) குரங்குகள் - (1) கன்றுகளைத் தவிர்த்தன
   (ஆ) பசுக்கள் - (2) மரங்களிலிருந்து வீழ்ந்தன
   (இ) பறவைகள் - (3) குளிரால் நடுங்கின
   (ஈ) விலங்குகள் - (4) மேய்ச்சலை மறந்தன
   (அ) 1 , 3 , 4 , 2 (ஆ) 3 , 1 , 4 , 2
   (இ) 3 , 2 , 1 , 4 (ஈ) 2 , 1 , 3 , 4
3. வியர்வை வெள்ளம் , வளைஇ , - இலக்கணக்குறிப்பு தருக.
   (அ) உவமை , இன்னிசையளபெடை
   (ஆ) உருவகம் , சொல்லிசையளபெடை
   (இ) உருவகம் , செய்யுளிசையளபெடை
   (ஈ) உருவகம் , உயிரளபெடை
4. சிற்பி பாலசுப்பிரமணியம் சாகித்திய அகாதெமி பரிசு பெற்ற நூல்
   (அ) ஒரு கிராமத்து நதி (ஆ) ஒளிப்பறவை
   (இ) சர்ப்பயாகம் (ஈ) சூரிய நிழல்
5. நடுவண் அரசு தேசிய பேரிடர் மேலாண்மை அமைத்த ஆண்டு _______
   (அ) 2003 (ஆ) 2005 (இ) 2004 (ஈ) 2006
6. "உயர்திணை என்மனார் மக்கட்சுட்டே
   அஃறிணை என்மனார் அவரல பிறவே" - இந்நூற்பா
   இடம் பெற்ற இலக்கண நூல் _______
   (அ) நன்னூல் (ஆ) அகத்தியம்
   (இ) தொல்காப்பியம் (ஈ) இலக்கண விளக்கம்
7. கூதிர்ப்பருவம் _______
   (அ) ஆவணி , புரட்டாசி (ஆ) மார்கழி , தை
   (இ) மாசி , பங்குனி (ஈ) ஐப்பசி , கார்த்திகை
8. *'ஆர்கலி'* என்பதன் பொருள் _______
   (அ) புதுமழை (ஆ) வெள்ளம் (இ) கன்னம் (ஈ) விலங்கு

Available in /AllAbtEngg Android App too, Also check www.SmartPoet.Net & www.PhotoShip.Net

Diploma, Anna University-UG, PG., HSC & SSLC
Notes
Syllabus
Question Papers
Results and Many more…
Available @
www.AllAbtEngg.com



**II. எவையேனும் நான்கிற்கு மட்டும் விடையளி.** 4 x 2 = 8

9. அணியிலக்கணத்தைக் கூறும் இலக்கண நூல்கள் யாவை?
10. பசுமைக் குடில் வாயுக்கள் யாவை?
11. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட தமிழின் துணை வேண்டும் என்கிறார்?
12. *"ஆளுக்கொரு மரம் வளர்ப்போம்"* என்னும் முழக்கத் தொடர் வாயிலாக எவற்றை வலியுறுத்துவாய்?
13. மொழியின் இயல்பு வழக்குகளைக் கலையியல் வழக்குகளாக மாற்றுபவை எவை?

**III. எவையேனும் ஐந்திற்கு மட்டும் விடையளி.** 5 x 3 = 15

14. வாடைக் காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?
15. பேரிடர் மேலாண்மை ஆணையம் - விளக்கம் தருக.
16. ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும் - இடஞ் சுட்டிப் பொருள் விளக்குக.
17. பின்வரும் இரு பாக்களின் கருத்துகளிலுள்ள வேற்றுமையை எடுத்துக்காட்டுக?

| | |
|---|---|
| பழையன கழிதலும் புதியன புகுதலும்<br>வழுவல கால வகையி னானே<br>- நன்னூல் | மீண்டு மந்தப் பழமை நலம்<br>புதுக்குதற்கு மெய் சிலிர்க்கத்<br>தமிழ்க்குயிலே! கூவி வா! வா<br>- சிற்பி . பாலசுப்பிரமணியம் |

18. உயர் திணைப் பன்மைப் பெயர்கள், பன்மை விகுதி பெற்று வருமாறு இரண்டு தொடர்களைக் கூறுக.
19. தமிழில் பிழையின்றி எழுதுவதற்கு மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள் யாவை?

**IV.** 1 x 4 = 4

20. *"ஓங்கலிடை வந்து"* எனத் தொடங்கும் தண்டியலங்காரப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

**V. எவையேனும் இரண்டிற்கு மட்டும் விடையளிக்கவும்.** 2 x 5 = 10

21. தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.
22. புயல் தாக்கத்தினால் குடியிருப்புகளுக்கு அருகில் அறுந்து கிடக்கும் மின் இணைப்புகளைச் சரி செய்யக் கோரி உங்கள் ஊர் மின் வாரியப் பொறியாளர்களுக்குக் கடிதம் எழுதுக.
23. பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்பு நலத்தை விவரிக்க.

★★★★★★

Available in /AllAbtEngg Android App too, Also check www.SmartPoet.Net & www.PhotoShip.Net